ISSN:2582-9599



# திருமந்திரத்தில் வாழ்வியல் சிந்தனைகள்

காளீஸ்வரி

114

**ஆய்வுச்சுருக்கம்**

மானுடப் பிறவியின் மகத்துவம் பாடியமனிதர் திருமூலர்.இவர் அருளாளராக, அடியாராக மட்டுமின்றி, தவயோகசித்தராகவும் உடல்பிணி அகற்றும் மருத்துவராகவும், ஞானயோகியாகவும் திகழ்ந்திருக்கிறார். அவரதுமந்திரங்கள் அனைத்தும் மனத்துயர் போக்கும் மாமருந்துகள். உலகப் பொதுமறையாம் திருக்குறளுடனும் ஒப்பிலாவாசகமாம் திருவாசகத்துடனும் திருமந்திரத்தைஒப்பவைத்துப் பேசுகிறார் ஔவை மூதாட்டி.திருமூலர் இறைசித்தாந்தம் மட்டும் கூறவில்லை.வையத்துள் வாழ்வாங்குவாழ வழி வகுக்கும் வாழ்வியல் சிந்தனைகளையும் கூறுகிறார்.சித்தர்களுள் ஒருவராகப் போற்றப்படும் திருமூலரின் சிந்தனைகள்,அக்காலச் சூழ்நிலையில் புரட்சிபுக்களாகவேமலர்ந்தன.

இறைநெறியைப் பரப்பஎழுந்ததிருமந்திரம் இறை நெறியை மட்டுமல்லாது உலக நோக்கிலானஎண்ணிலடங்காப் பல்துறைச் சிந்தனைகளைப் படரவிட்டுமணம்வீசித் திகழும் மாபெரும் படைப்பாகும்.ஒருபொருள் குறித்து விளக்க வந்தபல் துறைச் சிந்தனைகள் திருமந்திரத்தின் வேர்களை வலுவுட்டுவதாக அமைகின்றன. சமயம் மனிதனின் அகவாழ்க்கையையும், புறவாழ்க்கையையும் மேம்படுத்தும் அரிய,உன்னதமான பணியினைச் செய்கிறது.அச்சமய மேச மூகவாழ்வினைச் சுமூகமாக்கும் ஒத்திசைவாக்கும் பணியினையும் ஆற்றுகிறது.

மனிதன் தனக்கும் பிறர்க்குமானமேலானவாழ்வைவாழவேண்டும் என்றுஎண்ணும் போதுசமயம் அவனுக்குவழங்கும் சேவைஅளப்பரியது.மனிதசமூகம் ஒற்றுமையுடன் விட்டுக்கொடுத்துவாழவேண்டும்என்பதேசமயத் தோற்றத்தின் ஆதாரசுருதியாகும்.சமயம் மனிதகுலத்திற்குஆற்றும் அனைத்துப் பணிகளையும் முறைப்படுத்திஎடுத்துரைக்கும் சைவசமயத்தின் மிகச் சிறந்ததத்துவங்களைத் தன்னுள் அடக்கியதிருமந்திரம் மனிதவாழ்வில் பின்பற்றவேண்டியவாழ்வியல் சிந்தனைகளைக் கூறுகிறது.

திருமூலர் தம் திருமந்திரத்தில் வேதாந்த,சித்தாந்தசமய,தத்துவகருத்துக்கள் பலவற்றைப் பாங்கோடுபதிவுசெய்துள்ளார்.திருமூலர் கொல்லாமைநெறியையேதலையாயநெறியாகக் கருதினார்.புலால் உண்ணும் கீழ்மக்கள் நரகத்தில் தள்ளப்படுவர்என்கிறார்.கொலைசெய்தல்,பிறன்மனைநயத்தல் ஆகியவைபெரியபாதகங்கள் என்பதுதிருமூலர் துணிபு.பிறன்மனைநயத்தல்பெருந்துன்பம் தரும் பெரும்பாவமாகும்.அன்பேசிவம் என்பதுதிருமூலரின் இறைசார்ந்தகோட்பாடுகளுள் ஒன்று.திருமூலர் யாக்கைநிலையாமை,செல்வம் நிலையாமைபோன்றநிலையாமைகருத்துக்களைக் கூறுகிறார்.

திருமந்திரம் ஆன்றோர்களாலும்,சான்றோர்களாலும் தமிழ் வேதம்என்றுபோற்றப்படுகின்றது.இதனைப் பாடியவர் திருமூலர்.இது ஒன்பதுதந்திரங்களைக் கொண்டது.அதில் பதி,பசு,பாசம்,இறை,உயிர்,தளை.ஒழுக்கம்,ஒழுகலாறு,உடலின்மேன்மைவழிபாட்டுமுறைகள்,சக்கரவழிபாடுகள் என்பனமிகச் சிறப்பாகவிளக்கப்பட்டுள்ளன.இந்நூலின் சிறப்புக் கருதி இதனைச் சைவசமயச் சான்றோர்கள் பத்தாம் திருமுறையாகப் பகுத்துள்ளனர். .இது சமயம் சார்ந்தநூல். இது தோத்திரநூலாகவும்,சாத்திரநூலாகவும் உள்ளது.மானுடவாழ்க்கையைவடிவமைத்துத் தருகின்றஓர்



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

அற்புதமானஞானநூலாகும்.மேலும் அனுபவநூலாகவும் அமைந்துள்ளது.பல்வகையோகத்தில் சிவயோகத்தைமுறையாகபோதிக்கும் நூல்.ஓதுவதற்குஎளிதாய் இருப்பினும்,உணர்வதற்குஅரிதாக இருப்பது.மனிதன் நீண்டநாள்நல்லஉடல் வளத்தோடும், உயிர் வளத்தோடும்,மண் வளத்தோடும் வாழ்வதற்குத் தேவையானஅனைத்துவழிவகைகளையும் சொல்லுவதையேநோக்கமாகக் கொண்டுள்ளநூல் திருமந்திரமாகும்.இனி இக்கட்டுரையில்திருமந்திரத்தில் வாழ்வியல் சிந்தனைகளைப் பற்றிக் காணலாம்.

சமூகநலநோக்கு:

ஒருவன் உண்மையாகவே இறைவனைநேசிக்கிறவன் என்றால் அந்தநேசத்தை இந்தஉலகத்தின் ஒவ்வொருபொருளின்மீதும் அவன் காட்டக் கடமைப்பட்டவன்.சமூகத்திற்குஆற்றவேண்டியகடமைகள் மனிதர்களுக்குஉண்டு.ஆசையைத் துறப்பதுதான் துறவேயன்றிஆட்களைத் துறப்பதன்றுஎன்பதுதிருமந்திரக் கருத்து.

“யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான் பற்றிநின்றமறைப்பொருள் சொல்லிடின்” ( திருமந்திரம்-85)

துறவிகள் உலகின் மீதுள்ளபற்றினைப் துறந்தவர்களேஅன்றிஉலகையேதுறந்தவர்கள் அல்லர்.இதனைவள்ளுவரும்,“யான்எனதுஎன்னும் செருக்குஅறுப்பான் வானோர்க்கு,உயர்ந்தஉலகம் புகும்” என்றார்.இறைவனுக்குஎல்லாஉயிர்களும் ஆட்பட்டவை.ஆகவேசமயங்கள் பேதம் பாராட்டக்கூடாது.அடியார்கள் எல்லோரும் சாதிவேறுபாடுகளைக் கடந்துஒரேகுலம் என்றஉணர்வுடன் வாழவேண்டும்.இதுதான் சமயங்கள் எல்லாவற்றின் குறிக்கோளாகும்.இதை,

“ஒன்றேகுலமும் ஒருவனேதேவனும்
நன்றேநினைமின் நமனில்லைநாணாமே” (திருமந்திரம்-2154)

என்றதிருமந்திரப் பாடல் உணர்த்துகிறது.அப்பர்பெருமானும்.“அங்கமெலாம் குறைந்தழுகுதொழுநோயராய்ஆவுரித்துத் தின்றுஉழலும் புலையரேனும்”என்றுபாடுகிறார்.

சமுதாயத்தொண்டு:

மனிதனைவாழ்வாங்குவாழச்செய்துவாழும் நிலையைஉயர்த்தத்தான் சமயம்,தொண்டுநெறியின் உறைவிடமாகமாறவேண்டும்.சைவசமயத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றுசமுதாயத்தொண்டு.

“நடமாடக் கோயில் நம்பற்கொன்றீயிற்
படமாடக்கோயில் பகவற்கதுஆமே” (திருமந்திரம்-1857)

என்றமந்திரநெறியில் நடமாடும் மனிதர் சமூகத்திற்குத் தொண்டுசெய்யவேண்டும் என்பதைவிளக்குகிறார்..இதையேஎளியவழிபாட்டுமுறையில் சொல்லும்பொழுதுநாம் உண்ணும்போதெல்லாம் ஒருகைப்பிடிஉணவைப் பிறருக்குத் தந்துவிட்டுநாம் உண்பதுகடினமல்ல.நம்முடையஉள்ளத்துஅன்பைபிறருக்குச் சொல்லலாம்.அன்புகலந்தசொற்கள் பகைவரையும் நண்பர்களாக்கிவிடும்என்பதை,

“யாவர்க்குமாம் இறைவற்கொருபச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொருவாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொருகைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரைதானே” (திருமந்திரம்-252)


Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

உண்ணுவதற்குமுன் இறைவன் மேல் ஒருவில் இதழ் கொண்டுபுசித்தல்,அவ்வாறேபசுவுக்குஒருவாயுறைபுல் கொடுத்தல்,உண்பதற்குமுன் சிறிதளவுஉணவைப் பிறருக்குக் கொடுத்தல்,பிறர் மனம் நோகாதவாறு இனிமையாகப் பேசுதல்,இதுவேதிருமூலர் கூறும் எளியவழிபாட்டுமுறையாகும்.என்கிறார் திருமூலர்."பசிப்பிணிஎன்னும் பாவி....அதுதீர்த்தோர்; இசைச்சொல் அளவைக்குஎன் நா நிமிராதுஎனபசிப்பிணிதீர்ப்பவர்களின் புகழைப் பாடஎன் நாவிற்குவலிமை இல்லைஎன்றுபசிப்;பிணிதீர்ப்பவர்களைப் போற்றுகிறது" 1மணிமேகலைகாப்பியம். "எவ்வுயிரும்;என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்; நின்,தெய்வஅருட்கருணைசெய்யாய் பராபரமே" என்பதுதாயுமானவர்வாக்கு."வாடியபயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்கிறார்இராமலிங்கசுவாமிகள்.நாயன்மார்களிலும் இத்தகையசமுதாயத் தொண்டுகளைநாம் காணலாம் "பத்தியடியவர் பச்சிலைமுத்தி,கொடுத்துமுன்னின்றுஅருளித்,திகழ்ந்துள்தொருபாற்திருவடி" என்றுபட்டினத்தடிகள் திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில் திருவடிசேருவதற்கு வழி பச்சிலைமலர் இட்டுவழிபடுதல் என்பதைத் தெளிவாகக் கூறுகிறார்.

இறைவன் அன்புவடிவானவர்.எனவேதான் "அன்பெனும் பிடியுள் அகப்படும் மலைபோன்றவனே" என்றுபாடுவர்.உலகில் மக்கள் அன்புவேறு,இறைவேறுஎன்றுபாகுப்படுத்துகின்றனா.;.மலரும் மணமும் போல,அன்பே-சிவம்,சிவமே-அன்பு.இந்நிலையைத் திருமூலர்

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பேசிவமாவதுயாரும் அறிகிலார்" (திருமந்திரம்-270)

என்றுஅருளுகின்றார்.உலகிலுள்ளஉயிர்கள் மேல் அன்புசெலுத்துதல் ஒவ்வொருவருக்கும் தலையாயக் கடமையாகும்."அரும்பொருளாகஉள்ள இறைவன் அன்பில் உள்ளான் என்பதனைஉணர்ந்தநிலையில்தான் தேவாரத்,திருவாசகப் பாசுரங்கள்எழுந்தன"என்கிறார் டாக்டர் சி.பாலசுப்பிரமணியன்.2இதைத்தான் "அன்பின் வழியதுஉயிர்நிலை"என்றார் வள்ளுவர்.அன்பேசிவமானசிவபரம்பொருளுக்குத் "தொண்டர் கூடித்தொழுதுஅழுதுஆடிப்பாடும் அன்பலால் பொருளும் இல்லைஐயன் ஐயாறனார்க்கே"என்பதுஅப்பரின் அருள்வாக்கு."வம்மின்அடியீர் நாண்மலர் இட்டுத்தொழுதுய்ய,உம் அன்பினொடுஎம் அன்புசெய்து" என்றுஅடியார்களைஅழைக்கிறார் ஞானசம்பந்தப்பெருமான்,.மணிவாசகரும் "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு"என்கிறார்.

ஈகை:

எவ்விதஎதிர்பார்ப்பும் இன்றிபிறருக்குகொடுப்பதேஈகையாகும்..இப்பிறவியின் பயனேபிறர்க்குஈவதில்தான் உள்ளது.ஈகை ஆன்றோரால் அறமாகக் கொள்ளப்பட்டது. "ஈத்துவக்கும் இன்பமே இன்பம்"என்கிறார் வள்ளுவர்.வேண்டுவோர்க்குவேண்டுவதைவழங்குங்கள் என்கிறார் திருமூலர்.எல்லோர்க்கும் கொடுத்துஉதவுங்கள்.வேண்டியவர்,வேண்டாதவர் என்றுவேறுபாடுபார்க்காதீர்கள்.விருந்தினரைஎதிர்பார்த்துகாத்திருந்துஉண்ணுங்கள்.பழையஉணவைப் பாதுகாக்கநினைக்காதீர்கள்.காக்கைகள் தம் இனத்தைக் கத்திஅழைத்துக் கூட்டமாகஉண்ணுவதைஎண்ணிப் பாருங்கள்என்கிறார்.

"ஆர்க்கும் இடுமின் அவர்இவர் எண்ணன்மின்
பார்த்து இருந்துஉண்மின் பழம்பொருள் போற்றன்மின்" (திருமந்திரம்-250)



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

என்றபாடல் ஈகை செய்யவேண்டியவிதத்தைக் கூறுகிறது."கையில் பொருள் இருக்கும் போதேபலர்க்கும் பகுத்தளித்துஉண்ணுங்கள்.ஒன்றையும் ஒளிக்காதீர்கள்என்றுரைக்கிறார்சுந்தர சண்முகனார்" 3 மு.வரதராசனார்"கிடைத்ததைப் பகுத்துகொடுத்துத் தானும் உண்டுபலஉயி;ர்களையும் காப்பாற்றுதல்அறநூலார் தொகுத்தஅறங்கள் எல்லாவற்றிலும் தலையான அறமாகும்"4

புலன் அடக்கம்:

மனிதனின் செயல்கள் தூய்மையாக இருக்கமனத்தூய்மைவேண்டும்.புலன் அடக்கமேமனத்தூய்மைக்கு மூலதனம்.இதனைத் திருமூலர்,

"அஞ்சுளசிங்கம் அடவியில் வாழ்வன
எஞ்சாதிறைநிலைஎய்தலுமாமே" (திருமந்திரம்-1968)

புலன்களைஅடக்கினால் தெய்வத்தன்மைபெறலாம் என்கிறார்.பசுக்கள் அடங்காதநிலையில் அவைஆன்மாவுக்குகேடுதரக்கூடியவிதத்தில் வெறியோடுஆசைகளில் ஈடுபட்டுதிரிகின்றன.இப்பசுக்களுக்குக் காவல் ஏற்பட்டுவிட்டால் இந்தப் பசுக்களேஞானப்பாலைச் சொரிகின்றன.

"புhர்ப்பான் அகத்திலேபாற்பசுஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றிவெறித்துத் திரிவன" (திருமந்திரம்-2882)

புலன்களாகியபசுக்களைஅடக்கிஆளவேண்டும்.அப்படிஅடக்கினால் அதேபுலன்கள் பேரின்;பம் தரும். "அடங்காமல் திரிகிறஐந்துமாடுகள் வாழும் கொட்டில் இந்தஉடம்புநாற்றத்தில் கொசுக்கடியில்எத்தனைகாலம் வாழ்வது?மாமிசம் நிரம்பிய இந்தக் கொட்டிலைவிட்டுப் போகவேண்டும்.எங்கேபோவது?முத்தியாகியவீட்டுக்குப் போகவேண்டும்" ;5வள்ளுவர் "ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கலாற்றின்,எழுமையும் ஏமாப்புடைத்து"என்கிறார்.ஆடவரைப் பொருட்பெண்டிர் செல்வர்கள் என்றால்,விண்ணுலகத் தேவர் என்றழைப்பர்.பொருளற்றவர் என்றால் போவெளியேஎன்றுவிரட்டியடிப்பர்.இவர்கள் உதட்டில் இனிப்பும்,உள்ளத்தில் கசப்பும் கொண்டவர்கள்.எனவேஆண்மகன் தம் உயிர்ச்சக்தியைஅடக்கிபுலன்களைஅடக்கிஆளவேண்டும்.இல்லையெனில் பாவக்குழியில் விழுவர் என்கிறார்,

"தாழத் துடக்கித் தடுக்ககில்லாவிடில்
புழை நழைந்தவர் போகின்றவாறே" (திருமந்திரம்-05)

மக்கள் வாழ்வுமேம்படபுலன் அடக்கிஆளவேண்டும்;.இதனை"பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்பார் வள்ளுவர்.பொருளற்றவனை இந்தஉலகம் சபிக்கும்.புறந்தள்ளும்.உறவினர்கள் ஒதுங்கிநிற்பர்.ஆனால் இறைவனின் அருட்செல்வத்தைப் பெற்றால் வாழ்வைநாம் புறந்தள்ளிவிடுவோம்.உன்னதமானஅருளைநாம் தேடவேண்டும் என்கிறார் திருமூலர்.

கொல்லாமைநெறியும் புலால் உண்ணாநெறியும்:

மானுடம் உலகில் உள்ளஉயிர்கள் மீது இரக்கம் காட்டவேண்டும்.உயிர் வாழப் பிறஉயிர்களைக் கொன்றுதின்கின்றநிலைமாறவேண்டும்.உணவுக்காகப் பிறஉயிர்களைக் கொன்றுதின்பதுமிருகக்குணம்.சமயச் சான்றோர்கள் பிறஉயிர்களுக்குஎத்தீங்கும் செய்தல்



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

கூடாதுஎன்கின்றஅருள் உள்ளம் கொண்டவர்கள். ஓரறிவுயிர் முதல் அனைத்துஉயிர்களிலும் இறைவனைக் காண்பவர்களாகவாழ்ந்தனர்.அவ்வகையில் திருமூலர் கொல்லாமையை,

"கொன்றிலாரைக் கொலச் சொல்லிக் கூறினார்
தின்றிலாரைதினச் சொலித் தெண்டித்தார்" (திருமந்திரம்-195)

என்று கூறுகிறார்."ஓருயிரைக் கொன்றவன் கொலைக்குஉடன்பட்டவன்,கொன்றதனைவிலைக்குகொண்டவன்,ஊனை சமைத்தவன்,உண்டவன், இவர்கள் செய்தபாவமானதுமிகபெரியது"என்கிறதுசிறுபஞ்சமூலம்.6இதனைவள்ளுவர்;"தன்னூன் பெருக்கற் தான்பிறிதுஊனுண்பான்"; என்றும் "கொல்லான் புலாலைமறுத்தானைக் கைகூப்பிஎல்லாஉயிரும் தொழும்;"என்கிறார்."கொலைசெய்யாமலும் ,புலால் உண்ணாமலும் வாழும் உயர்ந்தபண்பாளனை,எல்லாஉயிர்களும் கைதொழுதுதெய்வமாகநினைத்துப் போற்றும்;"7என்றுபுலியுர்க்கேசிகன்குறிப்பிடுகிறார்திருமூலர் சிவபுசைக்குஏற்றசிறந்தமலர்கொல்லாமையேயாகும் என்கிறார்

"பற்றுஆயநற்குருபுசைக்கும்பன்மலர்
மற்றோர் அணுக்களைக் கொல்லாமை" (திருமந்திரம்-20)

இறைவனை புஜிக்கமலர்களைப் பயன்படுத்துவர்.ஆனால் இங்குமனிதனின் நல்ஒழுக்கங்கள் ஒவ்வொன்றும் ஒருமலராகக் கொள்ளப்படுகிறது.எனவேகொல்லாமையாகியஒழுக்கமேசிறந்தமலராகக் கருதப்படுகிறது.எவ்விலங்கின் தசையைஒருவன் உண்ணுகின்றானோஅந்தவிலங்குக் குணமேஉண்பவனுக்குவந்துசேரும்.அறிவியல் அடிப்படையிலும் புலால் உணவுமறுப்பேபோற்றப்படுகின்றது.ஊன் உண்பவர்களைத் திருமூலர்கீழ்மக்கள் என்றுகடிந்துரைக்கிறார்.

"பொல்லாப்புலாலைநுகரும் புலையரை
எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்" (திருமந்திரம்-199)

ஓர் உயிரைக் கொன்றுஅதன் சதையைஉண்பவர்களுக்குநல்லெண்ணங்கள் ஏற்படாதுஎன்பதாலேயேதிருமூலர் அவர்களைப் புலையர் என்கிறார். "தன் சதையைப் பெருக்குவதற்குத்; தான் பிறிதோhர் உயிரின்தசையைத் தின்கின்றவன் எப்படிஉயிர்களுக்குஎல்லாம்அருள் உடையவனாக இருக்கமுடியும்"; என்கிறார்8 மு.வரதராசனார்.மேலும் "புண்ணியநதிகளில் நீராடினாலும்,இறைவழிபாடுகள் செய்துவந்தாலும்ஞானநூல்களைகற்றிருந்தாலும்,தானதர்மங்கள் பலபுரிந்தாலும்,புலால் உணவுஉட்கொள்ளும் செயல் இழக்கச் செய்துநரகத்துக்குஒப்பானதுன்பத்தையேதேடித்தரும்" என்றுஎச்சரிக்கிறாh";;9 இராமலிங்கவள்ளலார். "உடல் சூட்டை சீராகவைப்பதுசைவஉணவுமட்டுமே" என்கிறார்10ஊரன் அடிகளார். இதனால் புலால் உண்ணுதல் சமுதாயத்தால் தவிர்க்கப்படவேண்டியஒன்றுஎன்பதைஉணரமுடிகிறது.

புpறன்மனைநயவாமை:

புpறன்மனைநயத்தல் பெருந்துன்பம் தரும் பெரும் பாவமாகும்.அன்புடைய இல்லத்தரசிவீட்டில் இருக்கபிறர் மனைவியைஅடையவிரும்பும் இளைஞர் தம் வீட்டில் பலாப்பலத்தைத் தின்னமுடியாமல்,எங்கோபழுத்திருக்கும் ஈச்சம் பழத்துக்குஆசைப்படுவதுபோன்றதாகும்.

"ஆத்தமனையாள் அகத்தில் இருக்கவே
காத்தமனையாளைக் காமுறும் காளையர்" (திருமந்திரம்-11)



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

என்கிறதுதிருமந்திரம்.பெண்ணைப் போகப் பொருளாகக் கருதும் நிகழ்வை இந்திரன்,இராவணன் உள்ளிட்டபுராணமாந்தர்களின் வழி அறியலாம்.சுந்தரசண்முகனார் "மென்மைத் தன்மையுடையஅன்புமனையாட்டிஅகத்திருக்க,ஒருவன் அயலான் மனைவியைநோக்குவதுஏனோ?"என்கிறார்.9மாற்றானின் மனைவியை இச்சிப்பது "பாம்பின் தலையைநக்கிசுவைப்பதுபோன்றதன்மையுடையது" என்கிறதுநாலடியார்.11"பிறன்மனைநோக்காதபேராண்மை"என்கிறார் வள்ளுவர் மாற்றான் மனைவியைவிரும்புவதுகாட்டாற்றுவெள்ளத்தில் சிக்கிக் கொண்டுதவிப்பதைப் போன்றதாகும்.இதை, "மனை புகுவார்கள் மனைவியைநாடில்;" (திருமந்திரம்-02)என்கிறார்.பிறர்மனைபுகுவதைப்பிறர் காணின் குடிக்குப் பழியாகும்.அகப்பட்டுக் கொண்டாலோகால் துண்டிக்கப்படும் என்கிறார்சுந்தர சண்முகனார்.12

யாக்கைநிலையாமை:

நல்வினைகள்,தீவினைகள் ஆகியவற்றால் அடைக்கப்பட்டது இந்தஉடம்பு.அத்தகையஉடம்புசிலகாலம்தான் உலகில் வாழும்.அக்காலத்தில் தனக்குஎன்றுஅறுதிவைக்கப்பட்டவினைபோகங்களைஅதுஅனுபவிக்கும்.அவற்றையெல்லாம் உடனிருக்கும் மனைவி,மக்களும் அனுபவிப்பர். காலனால் கைப்பற்றப்பட்டு உயிர் சென்ற பின் கூடவே இன்பசுகங்களைஅனுபவித்தமனைவியோ,மக்களோஉடன் வாரார். பின் எவர் வருவர் எனின் அவர் வாழ்கின்றகாலத்தில் கடைப்பிடித்துவந்தவிரதத்தின் பயனும் ஞானமுமேஆகும்.இதனை,

"உண்டஅப்பெண்டிரும் மக்களும் பின்செலார்
கொண்டவிரதமும்ஞானமும் அல்லது"(திருமந்திரம்-317)

என்கிறார் திருமூலர்"நெருநல் உளனொருவன் இன்றில்லைஎன்னும் பெருமையுடைத் திவ்வுலகு" என்பதுதிருக்குறள்.. "நேற்றுஉள்ளவனாகஇருந்தஒருவன் இன்றில்லைஎன்னும் நிலையாமையாகியபெருமையுடையதுதான் இவ்வுலகம் என்றபொருளில் யாக்கைநிலையாமை"பற்றிக் கூறுகிறார்.13; மு.வரதராசனார்கருத்தை,அவர். காலத்திற்குமுன்னேயேதிருமூலர் எவ்வாறு கூறுகின்றார் என்பதைப் பின்வரும் பாடலால் அறியலாம்

"அடப்பண்ணிவைத்தார் அடிசிலைஉண்டார்
மடக்கொடியாரொடுமந்தணம் கொண்டார்
இடப்பக்கமே இறைநொந்ததுஎன்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந்தாரே";; (திருமந்திரம்-148)

"மேற்கூறியகருத்துவலிமைபெறுவதோடுஉணவியல்,உடலியல்,நோயியல்ஆகியனபற்றியும் கருத்திழையோட்டம் இருத்தல் நோக்குதற்குரியது";;14மேலும் கம்பர் இராமகாதையில் நகர் நீங்குபடலத்தில் "பொன்றுதல் ஒருகாலத்தும் தவிருமோபொதுமைத்தன்றோ! இன்றுளார் நாளைமாள்வார்" ; என்றுசொல்லுகிறார்.திருவாய்மொழி"மின்னின் நிலையிலமன்னுயிர் யாக்கைகள்" ;; என்கிறது.அப்பர் திருக்காட்டுப்பள்ளிபதிகத்தில்"இன்றுளார் நாளையில்லைஎனும் பொருள் ஒன்றும் ஓராதுஉழிதரும் ஊமர்காள்";; என்கிறார்.எல்லாமேநிலையாமையைக் குறித்துக் கூறப்பட்டக் கருத்தாகும்.

செல்வம் நி.லையாமை:

செல்வம் நிலையாமையைநன்குஅறிந்துதெளியுங்கள்.தெளிந்தவர்கள் பயங்கொள்ளவேண்டியதில்லை.ஆற்றுவெள்ளம் போல் பெருகிவரும் செல்வத்தைக்



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

கண்டுமயங்காமல்,உங்களதுபொருட் பற்றினைநீக்கி,மேலானசிவமாகியசெல்வத்தைபெருக்கிக் கொள்ளுங்கள்.உயிரைஉடலினின்றுஎடுத்துச் செல்கின்ற கூற்றுவன் வரும்போதுஅவனைவெல்லுதல் கூடும் என்கிறதுஒருபாடல்

“மாற்றிக் களைவீர்; மறித்துங்கள் செல்வத்தைக்
கூற்றன் வருங்காலில் குதித்தலுமாமே”(திருமந்திரம்-172)

கூற்றன்வருங்கால்குதித்தலுமாமேஎன்பதற்குமேலாகியசிவமாகியசெல்வத்தைப் பெற்றால் இயமனையும் வெல்லலாம் என்பதுபொருளாம்.இதற்குமார்கண்டேயருக்குத் திருக்கடவுர்பெருமான் அருள்புரிந்ததையேசான்றாகக் கொள்ளலாம்.திருவள்ளுவரும் “தவம் செய்தலால் வரும் வல்லமைபெற்றார்க்குக் கூற்றம் குதித்தலும் கை கூடும்” ; என்றுதவம் என்றஅதிகாரத்தில் கூறுகின்றார்.வேதனையில்
மிகப்பெரியவேதனைமரணவேதனைஆகும்.அத்தகையமரணவேதனையைவெல்லுவதற்குரியவழியைக் கூறுகின்றார்.

உடம்போடுஉயிரிடைவிட்டோடும் போது
சுடும்பரிசத்தையும் சூழ்கிலாரே”(திருமந்திரம்-176)

இப்பாடலில் இறைவனைஎண்ணுவதேமரணவேதனையைத் தடுக்கும் உபாயமாகும். “செல்வம் சகடக்கால் போல்தாழ்ந்தும்,உயர்ந்தும் நிலையின்றிவருவதால் அச்செல்வம் உண்டானகாலந் தொட்டுப் பலருக்குமிட்டுத் தாமும் உண்பதுநலம்;;;;”;;15எனமக்களுக்குஅறிவுறுத்தும் நாலடியார்கருத்தும் ஒப்பிட்டுநோக்குதற்குரியதாகும்.

தொகுப்புரை:

திருமந்திரம் தமிழ் தேன்குடம்.தொட்ட இடமெல்லாம் உள்ளி;ல்,உணர்வில்,உயிரில் தித்திக்கும் தன்மையுடையது.பிறவிவரம் வேண்டிப் பாடுவதேபக்தி இலக்கியமாக இருந்தஅடியார்கள் நடுவில் ‘ஊனுடம்புஆலயம்’என்றுபாடியதிருமூலர் திருமந்திரம் தமிழ்ப் பண்பாட்டுப் பலகனியாகவும்,தமிழ் ஞானத் திறவுகோலாகவும்,தமிழ்ச் சமயத்தின்- சமுதாயத்தின் தலைவாசலாகவும் திகழ்கின்றது.இஃது அனைவருக்கும்பயன்படக்கூடியஅரியகருத்துக் கருவுலமாகும்.இத்திருமந்திரம் வாழ்வுக்குவழிகாட்டியாகச்சடங்குகளுக்குமுக்கியத்துவம் கொடுக்காது‘ஒன்றேகுலம் ஒருவனேதேவன்’ ; என்னும் மெய்யானபக்திக்குமுக்கியத்துவம் கொடுத்துள்ளதுதனிச்சிறப்பாகும்.தமிழில் இப்பாடல்கள் இருப்பதாலே இவை மந்திரம் அல்லஎன்றுயாரும் சொல்லிவிட கூடாதுஎன்பதற்காகவேமந்திரத்தின் முத்தாய்ப்பானஈற்றுப்.பாடலில்; ‘மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ் முந்நூறுமந்திரம்’ ; என்றுபிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

திருமூலரே இதனைப் தெளிவுபடுத்தும் விதமாக‘நான் பெற்றஇன்பம் பெறுக இவ்வையகம்’ஊன் பற்றிநின்றஉணர்வுறுமந்திரம் எனத்தாம் அருளியவை இறைவன் அருளால் செய்ததமிழ் மந்திரங்கள் எல்லோரும் இன்புறஎன்பதன் மூலம் திருமூலரின் ஆன்மநேயம் ஆருயிர்கள் அனைத்தினிடத்திலும் வைத்தபேரன்பு,மெய்பக்தி,திருமூலரைஅருட்கவியாக,ஞானியாகக்
கொள்வதைவிடஅன்பேசிவமாக,அறிவேதவமாகக் கொண்டுவாழ்ந்தஞானத் தவயோகிதிருமூலர்.அவரருளியதிருமந்திரம் தமிழ் செய்ததவம்,தமிழர் செல்வம் என்றும் கொள்வதேஏற்புடையதாகும்.மானுடச் சிறப்புக்குமகத்துவம் சேர்த்தமாமனிதர் திருமூலர்.

திருமூலர் தம் திருமந்திரத்தில் வேதாந்த,சித்தாந்தசமய,தத்துவகருத்துக்கள் பலவற்றைப் பாங்கோடுபதிவுசெய்துள்ளார்.திருமூலர் கொல்லாமைநெறியையேதலையாயநெறியாகக் கருதினார்.புலால் உண்ணும் கீழ்மக்கள் நரகத்தில் தள்ளப்படுவர் என்கிறார்.கொலைசெய்தல்,பிறன்மனைநயத்தல் ஆகியவைபெரியபாதகங்கள் என்பதுதிருமூலர் துணிபு. பிறன்மனைநயத்தல் பெருந்துன்பம் தரும் பெரும்பாவமாகும்.அன்பேசிவம் என்பதுதிருமூலரின் இறைசார்ந்தகோட்பாடுகளுள் ஒன்று.திருமூலர் யாக்கைநிலையாமை,செல்வம் நிலையாமைபோன்றநிலையாமைகருத்துக்களைக் கூறுகிறார்.

**அடிக்குறிப்பு:**

1.புலியூர்க்கேசிகன் தெளிவுரை,மணிமேகலை மூலமும் உரையும்,பக்கம்-131

2.டாக்டர் சி.பாலசுப்பிரமணியன்,வாழ்வியல்நெறிகள்,பக்கம் -

3.புலவர் சுந்தரசண்முகனார்,நாலடியார் நயவுரை,பக்கம் -19

4.மு.வரதராசனார்,திருக்குறள் விளக்கவுரை,பக்கம் -25

5.கி.வா.ஜகந்நாதன்.கந்தரலங்காரச் சொற்பொழிவுகள் 3;,,பக்கம் -188

6.ஞா.மாணிக்கவாசகன்,,சிறுபஞ்சமூலம் மூலமும் விளக்கஉரையும்,பக்கம் -11

7.திருக்குறள்,புலியூர்க்கேசிகன் புதியஉரை,பக்கம்-56

8.மு.வரதராசனார்,திருக்குறள் விளக்கவுரை,பக்கம்-56

9.டாக்டர் சி.பாலசுப்பிரமணியன்,வாழ்வியல்நெறிகள்,பக்கம் -169

10.ஊரன் அடிகளார்,சர்வதேசதமிழ் தாவரஉணர்வாளர்கள் சங்கமத்தின் மாநாடு,,நவம்பர்-29

11.புலவர்சுந்தரசண்முகனார்,நாலடியார் நயவுரை,பக்கம் -17

12.புலவர்சுந்தரசண்முகனார்,நாலடியார் நயவுரை,பக்கம் -15

13.மு.வரதராசனார்,திருக்குறள் விளக்கவுரை,பக்கம் -72

14.எஸ்.சூரியமூர்த்தி,சிந்தனைக்குதெளிவுதரும் சித்தர் பாடல்கள்,பக்கம் -255

15.புட்பரதச் செட்டியார்,நாலடியார் மூலமும் விளக்கஉரையும்,பக்கம் -35

**துணைநூற்பட்டியல்:**

1.நாமக்கல் கவிஞர்-திருக்குறள்; தெளிவுரை
தென்றல் நிலையம்,200.2

2.எஸ்.சூரியமூர்த்தி -சிந்தனைக்குதெளிவுதரும் சித்தர் பாடல்கள்
நர்மதாபதிப்பகம்,சென்னை,2012.

3.;மு.வரதராசனார்-திருக்குறள்தெளிவுரை
புhரிநிலையம்,2016.

4.திருக்குறள்புதியஉரை- புலியூர்க்கேசிகன்
பும்புகார் பதிப்பகம்,1986.

5.ஜெகத்ரட்சகன்; -நாலடியார்மூலமும் உரையும்
ஆழ்வார்கள் ஆய்வுமையம்,2011.

6.டாக்டர் சி.பாலசுப்பிரமணியன் -வாழ்வியல் நெறிகள்
புhரிநிலையம்,சென்னை,1990.

7.சுந்தர சண்முகனார் -நாலடியார் நயவுரை

புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்,புதுச்சேரி,1970.
8.கி.வா.ஜகந்நாதன் -கந்தரலங்காரச் சொற்பொழிவுகள்
அல்லயன்ஸ்,சென்னை,2003.
9.புலியூர்க்கேசிகன் தெளிவுரை -மணிமேகலை மூலமும் உரையும்
பாரிநிலையம்,,,சென்னை,1997.
10.ஞா.மாணிக்கவாசகன் -சிறுபஞ்சமூலம் மூலமும் விளக்கஉரையும்
பும்புகார் பதிப்பகம்.1985
11.ஊரன் அடிகளாh-;சர்வதேசதமிழ் தாவரஉணர்வாளர்கள் சங்கமத்தின் மாநாடு,
நவம்பர்-29